தினமணி

# உழைப்புக்கேற்ற ஊதியம் தேவை!

நா. குருசாமி

First Published : 23 Dec 2011 04:16:01 AM IST

உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு- இவைதான் ஒரு மனிதன் வாழ்வதற்கு அத்தியாவசியமானவை. இந்த மூன்றில் மிக முக்கியமான உணவுத் தேவையை நிறைவேற்றும் விவசாயிகளின் நிலைமை முன்னெப்போதையும்விடத் தற்போது மிக மோசமான நிலையில் உள்ளது.

காலம் தவறிப் பெய்யும் பருவமழை, பாசனத்துக்குப் போதிய அளவு தண்ணீர் கிடைக்காதது, ரசாயன உரங்களின் கடுமையான விலை உயர்வு, வேலைக்கு தொழிலாளர்கள் கிடைக்காதது, அடிக்கடி ஏற்படும் அறிவிக்கப்படாத மின் தடை உள்ளிட்ட பல்வேறு இடர்ப்பாடுகளால் விவசாயம் செய்வது என்பதே இன்று மரண அவஸ்தை போலாகிவிட்டது.

விவசாயிகளின் நலன்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தினாலும், அவற்றின் பயன்கள் சிறு, குறு விவசாயிகளைச் சென்றடையவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும். அரசு அளிக்கும் மானிய உதவிகள், பயிர்க் கடன், இலவச மின்சாரம், பயிர்க் காப்பீட்டு பலன்கள் போன்றவை பெரும் விவசாயிகளுக்குத்தான் சாதகமாக உள்ளன. சிறு, குறு விவசாயிகள் இந்தப் பயன்களைப் பெறுவதற்குப் படும்பாடு சொல்லி மாளாது.

மழையில் நனைந்தும், வெயிலில் வதங்கியும் அரும்பாடுபட்டு சாகுபடி செய்யும் சிறு விவசாயிகளுக்கு, அவர்களது உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காததால், அவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு இலக்காகி, விவசாயத்தையே கைவிடும் சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். அதனால்தான், விளைநிலங்கள் தரிசாகி, வீட்டுமனைகளாக உருமாற்றமடைவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஒரு நாடு உண்மையான வளர்ச்சியை எட்ட வேண்டுமானால், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும். உணவுக்காக, வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலைமை ஒருபோதும் ஏற்பட்டுவிடக் கூடாது.

இதை மத்திய, மாநில அரசுகள் புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதும், சில்லறை வர்த்தகம் உள்பட அனைத்திலும் வெளிநாட்டு

நிறுவனங்களுக்கு நமது கதவுகளைத் திறந்துவிடுவதும்தான் தனது முக்கியப் பணி என்பது போல மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் இத்தகைய போக்கால்தான் நாடு முழுவதும் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தன்னுடைய உழைப்பால் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத விரக்தியில் விவசாயிகள் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்கின்றனர்.

இதற்கு என்னதான் தீர்வு? விவசாயிகளின் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, முனைப்புடன் செயல்படக் கூடியவர்கள் மத்தியிலும், மாநிலங்களிலும் வேளாண்மைத் துறை அமைச்சர்களாகப் பொறுப்பேற்க வேண்டும்.

தற்போது மத்தியில் வேளாண்மைத் துறை அமைச்சராக உள்ள சரத் பவாருக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மற்றும் தனது மாநிலத்தில் உள்ள பெரு நிறுவனங்களின் நலன்களைக் காப்பதில் கவனம் செலுத்துவதற்கே நேரம் போதவில்லை. அவருடைய செயல்பாடுகள் அனைத்தும் சிறு, குறு விவசாயிகளைப் பாதிக்கும் வகையில்தான் உள்ளன.

அடுத்ததாக, நாடு முழுவதும் பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். இதற்கான பொறுப்புகளை அரசு அலுவலர்களிடம் விடாமல், அந்தந்தப் பகுதியில் உள்ள விவசாய அமைப்புகள் அல்லது பாசனதாரர்கள் சங்கங்களிடம் ஒப்படைத்துவிட்டு, தேவையான நிதியுதவியை மட்டும் மத்திய, மாநில அரசுகள் வழங்கலாம்.

தொழிலாளர்கள் பற்றாக்குறை பிரச்னைக்கு தீர்வு காண, மத்திய அரசு செயல்படுத்தும் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் உடனடியாக மாற்றம் கொண்டு வர வேண்டும். இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை என மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் வெளிப்படையாகவே கூறி வருகிறார். எனவே, இந்தத் திட்டத்தின் கீழ் வேலை அளிக்கப்படும் தொழிலாளர்களை விவசாயப் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கலாம். இதை மேற்பார்வையிட்டு, செயல்படுத்தும் பொறுப்புகளை அந்தந்தப் பகுதி விவசாய சங்கங்களிடமே ஒப்படைக்கலாம்.

தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் பணிகளால் கிடைத்த பலன்களை மதிப்பீடு செய்வதற்கான ஒருங்கிணைந்த அமைப்பு ஏதும் இல்லை.

எனவே, இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்படும் நிதி பெரும்பாலும் விரயமாவதாக பரவலாகப் புகார் எழுந்துள்ளது. இத் திட்டத்தில் நடைபெறும் முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும் இந்த நிதியை விவசாய அமைப்புகளுக்கு வங்கிகள் மூலம் நேரடியாக வழங்கலாம்.

இதேபோல, நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுக்காக வழங்கப்படும் பல்லாயிரம் கோடி நிதியும் முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்ற புகாரும் உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளும் நீண்டகாலப் பயன்களை அளிப்பதாக இல்லை. இந்தத் திட்டத்தின் கீழ் எம்.பி.க்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை விவசாய வளர்ச்சிக்கு உதவும் விதத்தில், பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு பயன்படுத்த மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும்.

இவை எல்லாவற்றையும்விட மிக முக்கியமானது, விவசாயிகளுக்கு அவர்களது உழைப்புக்கு ஏற்ற வருவாய் கிடைப்பதை உறுதி செய்வதுதான். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்று பல காலமாகவே கூறி வருகின்றனர். விவசாய விளைபொருள்கள் தவிர, வேறு எந்தவொரு பொருளானாலும் அதை உற்பத்தி செய்பவர்கள்தான் அதற்கான விலையை நிர்ணயம் செய்கின்றனர். ஆனால், விவசாயிகளுக்கு மட்டும் அந்த உரிமை அளிக்கப்படவில்லை. இது என்ன நியாயம்?

ஒவ்வொரு உணவுப் பயிருக்கும் அதன் சாகுபடிச் செலவைக் கணக்கிட்டு, அத்துடன் 50 சதம் கூடுதலாக விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என எம்.எஸ். சுவாமிநாதன் குழு பல ஆண்டுகளுக்கு முன்பே பரிந்துரை செய்துள்ளது. ஆனால், இந்தப் பரிந்துரையை ஏற்று, நடைமுறைப்படுத்தாமல் மத்திய அரசு தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து வருகிறது.

தனியார் விமான நிறுவனத்துக்கு இழப்பு என்றவுடன் துடிதுடிக்கும் மத்திய அரசு, விவசாயிகளுக்கு உழைப்புக்கேற்ற வருவாயை உறுதி செய்வதில் மட்டும் பாராமுகமாக இருப்பது நமது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு நல்லதல்ல.

**தலையங்கம்: பொய் சொல்வது யார்?**

First Published : 23 Dec 2011 04:26:29 AM IST

Last Updated : 23 Dec 2011 05:19:39 AM IST

முல்லைப் பெரியாறு அருகே புதிய அணை கட்டுவதற்கு ஆய்வு (சர்வே) செய்வதற்காக எந்தக் கோரிக்கையையும் கேரள அரசு இதுவரை அனுப்பவில்லை என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன் கூறியிருப்பதைப் பார்க்கும்போது, ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

ஏனென்றால், கேரள அரசு சர்வே நடத்தி, எந்த இடத்தில் அணை கட்ட வேண்டும்; எவ்வளவு உயரம் கட்ட வேண்டும் என்பதையெல்லாம் கணித்து விட்டது என்கிற தகவலை கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தாமஸ் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போது, இப்படியொரு பதிலை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர், அதிலும் தமிழகத்தைச் சேர்ந்தவர் இவ்வாறு கூறியிருப்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தாமஸ் அளித்த பேட்டியில், புதிய அணைக்கான கருத்துரு உச்ச நீதிமன்றம் நியமித்துள்ள சிறப்புக் குழுவிடம் செப்டம்பர் 29-ம் தேதி அளிக்கப்படும் என்று (செப்.20-ம் தேதி ) முன்பு அளித்த பேட்டியிலேயே தெரிவித்திருக்கிறார்.

தற்போது அமைச்சரின் பேட்டி குறித்து கேரள பத்திரிகைகள், கேரள நீர்ப்பாசனத் துறை தலைமைப் பொறியாளரிடம் விளக்கம் கேட்டபோது அவரும், "ஆய்வு குறித்து ஏற்கெனவே மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் அனுமதி பெற்று ஆய்வு நடத்திய பிறகுதானே, புதிய அணைக்கான கருத்துருவே தயாரிக்க முடிந்தது' என்று கூறியுள்ளார். புதிய அணை அமையவுள்ள பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி. இங்கே எந்தவொரு பணியை மேற்கொள்வதாக இருந்தாலும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதியைப் பெறாமல் நடத்த முடியாது.

"வனத்துறையின் அனுமதி பெறாமல் எப்படி ஆய்வு நடத்த முடியும்? ஆய்வு நடத்தாமல் எப்படி டிபிஆர் (டீடெய்ல்டு பிராஜக்ட் ரிபோர்ட்) தயாரிக்க முடியும்? 2010-ம் ஆண்டிலேயே புதிய அணை கட்டுவதற்காக சுற்றுச்சூழல் துறையின் அனுமதிக்கு விண்ணப்பித்தோம். சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு (ஈ.ஐ.ஏ) செய்யாமல் அனுமதி அளிக்க இயலாது என்று மத்திய அரசு சொன்னது. அதன் பிறகு இந்த மதிப்பீட்டைச் செய்யும் பணியை கேரள வனஆராய்ச்சிக் கழகத்திடம் அளித்தோம். அவர்களால் செய்ய இயலவில்லை. அதனால் இதைச் செய்யக்கூடிய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இதுபற்றி மத்திய அரசுக்கும் தகவல் கொடுத்துள்ளோம்' என்று கேரள நீர்ப்பாசனத் துறையின் தலைமைப் பொறியாளர் வெளிப்படையாகப் பேட்டியளிக்கிறார்.

என்ன நடந்து கொண்டிருக்கிறது? மத்திய சுற்றுச்சூழல் அமைச்சராக ஜெய்ராம் ரமேஷ் பொறுப்பு வகித்த காலத்தில் இதற்கான அனுமதி கிடைத்ததாக கேரள எம்.பி.க்கள் சொல்கின்றனர்.

ஜனவரி 2010-ல் வெளியான செய்திகளில், கேரள நீர்ப்பாசனத் துறை புதிய அணைக்கான சர்வே நடத்தி, தற்போதுள்ள அணைக்குக் கீழே 426 மீ, 627 மீ, 650 மீ அணைகள் கட்டும் ஆய்வுகளை நடத்தியுள்ளதாகவும், இந்த இடங்களில் உள்ள மண், பாறையின் தன்மை குறித்து அறிய இதன் மாதிரிகளை ஆய்வுக்காக லால்பகதூர் சாஸ்திரி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்கூட செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது இரண்டு கேள்விகளைத்தான் நாம் மத்திய அரசிடம் கேட்க வேண்டியிருக்கிறது.

புதிய அணையைக் கட்டுவதற்கான ஆய்வு நடத்த மத்திய அரசு அனுமதி அளிக்காமல் இத்தனை பணிகளும் நடந்திருக்க முடியுமா? அனுமதியின்றி நடந்திருக்குமேயானால், அதற்காக மத்திய வனத்துறை என்ன நடவடிக்கையை இந்த மாநில அரசின் மீது மேற்கொள்ளப் போகிறது?

இதைவிட முக்கியமாக இன்னொரு கேள்வி இருக்கிறது.

மத்திய வனத்துறையின் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் அமைந்திருக்கும் முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில், புதிய அணை கட்டுவதற்கு அனுமதி அளிக்க முடியுமா? பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இத்தகைய புதிய அணையைக் கட்டுவதால் பல்லுயிர் பெருக்கத்துக்குப் பாதிப்புகள் ஏற்பட்டுவிடாதா?

அணையின் நீரை 142 அடிக்கு உயர்த்தினால் அதனால் தேங்கும் அணை நீர்ப் பரப்பு பல ஆயிரம் ஏக்கர் அதிகரிக்கும். அப்போது பல்லுயிர் பெருக்கம் பாதிக்கப்படும். அதைக் கருத்தில்கொண்டாகிலும் அணை நீரை 136 அடிக்கு மேலாக உயர்த்த அனுமதிக்கக்கூடாது என்று நீதிமன்றத்தில் கேரள மாநில முதல்வர் உம்மன் சாண்டி முறையிட்டிருக்கும்போது, புதிய அணை கட்டுவதால் மட்டும் பல்லுயிர் பெருக்கம் பாதிக்கப்படாதா? இதற்குக் கேரள முதல்வர் உம்மன் சாண்டி பதிலளிக்கட்டும்.

புவிவெப்ப மாநாட்டு ஒப்பந்தத்தில், வெப்ப மண்டலக் காடுகளைக் காப்பதாக ஒப்புக்கொள்ளும்பட்சத்தில், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் புதிய அணை கட்டுவது சாத்தியமா? அதற்கு மத்திய அரசு அனுமதிக்குமா? என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவர் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன்.

அந்த இடத்தில் புதிதாக அணை கட்டும் விவகாரத்தை கைவிடும் கோரிக்கையைத் தவிர, வேறு எதை வேண்டுமானாலும் தமிழக முதல்வருடன் பேசத் தயார் என்கிறார் கேரள முதல்வர் உம்மன் சாண்டி. புதிய அணையை ரூ.650 கோடிசெலவில் கட்டுவதற்கும் அவர்கள் திட்டம் தீட்டிவிட்டார்கள். புதிய அணையைக் கட்டும்போது, முல்லைப் பெரியாறு அணையை எவ்வாறு, எந்தெந்த நிலைகளில் உடைப்பது என்பதை பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியாக அளிக்கிறார்கள். உடைக்கப்படும் அணையிலிருந்து எந்தெந்தப் பகுதியை புது அணைக் கட்டுமானத்துக்குப் பயன்படுத்தலாம் என்றும் பேசுகிறார்கள்.

இவ்வளவு நடக்கிறதே, மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜனின் பதில் என்ன? அணை கட்ட அனுமதி தருவாரா, மாட்டாரா என்பதை அவர் தெளிவுபடுத்தியாக வேண்டும்!

பொய் சொல்வது யார், ஜெயந்தி நடராஜனா, உம்மன் சாண்டியா?

**ஏலக்காய் ஏலம் மீண்டும் தொடங்க முயற்சி: நாளை ஆலோசனைக் கூட்டம்**

First Published : 22 Dec 2011 12:27:31 PM IST

போடி, டிச. 21: ஏலக்காய் ஏலம் மீண்டும் தொடங்க இந்திய வாசனைப் பொருள் வாரியம் (நல்ண்ஞீங்ள் ஆர்ஹழ்க்) முயற்சி மேற்கொண்டுள்ளது. வெள்ளிக்கிழமை இதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

முல்லைப் பெரியாறு அணை பிரச்னை காரணமாக போடி, கம்பம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வாசனைப் பொருள் வாரியம் மூலம் நடைபெற்று வந்த ஏலக்காய் ஏலம் நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த டிச. 5-ம் தேதிக்கு பின் ஏலக்காய் ஏலம் நிறுத்தப்பட்டுள்ளதால், சுமார் ரூ.60 கோடி மதிப்பிலான ஏலக்காய் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் நலன் காக்கும் வகையில், மீண்டும் ஏலக்காய் ஏலம் தொடங்க வாசனைப் பொருள் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான ஆலோசனைக் கூட்டத்தை வாசனைப் பொருள் வாரியம் இடுக்கி மாவட்டம் புத்தடியில் நடத்த உள்ளது.

இதுகுறித்து வெளியீடுகள் பிரிவு துணை இயக்குநர் டாக்டர் பி.எஸ்.ஸ்ரீகாந்தன் தம்பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது:

முல்லைப் பெரியாறு அணை பிரச்னை காரணமாக முடங்கிப்போன ஏலக்காய் ஏலத்தை மீண்டும் துவக்க, வாசனைப் பொருள் வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது. ஏலக்காய் ஏலம் நடைபெறாததால் ஏல விவசாயிகள் பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் சுமார் பத்து லட்சம் கிலோ ஏலக்காய் தேங்கி கிடப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மீண்டும் ஏலக்காய் ஏலம் நடத்துவது குறித்து ஆலோசிப்பதற்கான ஆலோசனை கூட்டம் வெள்ளிக்கிழமை (டிச. 23) இடுக்கி மாவட்டம் புத்தடியில் உள்ள ஸ்பைசஸ் பார்க்கில் நடைபெற உள்ளது. இதில் டிச. 26 முதல் ஏலக்காய் ஏலத்தை சுமூகமாக நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்து முடிவு செய்யப்படும்.

இக்கூட்டத்தில் அனைத்து ஏல விவசாயிகள் சங்க உறுப்பினர்களும், ஏலதாரர்களும், வர்த்தகர்களும் பங்கேற்க வேண்டும் என தெரிவித்துள்ளார். மேலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஏலக்காய் ஏற்றுமதி அதிகரித்துள்ளது, ஏப்ரல்-அக்டோபர் மாதங்களில் சுமார் 2300 டன் ஏலக்காய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு 470 டன் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**மீன்குஞ்சு பண்ணை அமைக்க 50 சதவீத மானியம்**

First Published : 22 Dec 2011 11:43:01 AM IST

திருப்பூர், டிச. 21: திருப்பூர் மாவட்டத்தில் மீன்குஞ்சு பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் அளிக்கப்பட உள்ளது. இதற்கான தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டுள்ளன.

÷இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம்.மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை: மீன் வளத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2011-12ம் ஆண்டுக்கு திருப்பூர் மாவட்டத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் அளிக்கப்பட உள்ளது.

÷ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யக் கூடியதாக அமைக்கப்படும் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைக்கு இம்மானியம் வழங்கப்படும்.

அதற்கான இடம் தகுதியானதாகவும், வெள்ள அபாயம் உள்ள பகுதிக்கு வெளியேயும் இருக்க வேண்டியது அவசியம். தவிர, தரமான நிலநீர் அல்லது ஆற்றுப் பாசனப் பகுதியில் மின்வசதி, சாலை வசதி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

÷மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்க 2 ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது 10 ஆண்டு குத்தகைக்குப் பெற்றிருக்க வேண்டும்.

தேவைக்கும் அதிக விவசாயிகள் விண்ணப்பித்தால் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

÷விருப்பமுள்ளவர்கள் மீன்வள உதவி இயக்குநர், உள்நாட்டு மீன்வளம், எண் 4, எஸ்வி காம்ப்ளக்ஸ், வீரப்பம்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, திண்டல் அஞ்சல், ஈரோடு -12 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

**மீன்குஞ்சு பண்ணை அமைக்க 50 சதவீத மானியம்**

First Published : 22 Dec 2011 11:43:01 AM IST

திருப்பூர், டிச. 21: திருப்பூர் மாவட்டத்தில் மீன்குஞ்சு பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் அளிக்கப்பட உள்ளது. இதற்கான தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டுள்ளன.

÷இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம்.மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை: மீன் வளத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2011-12ம் ஆண்டுக்கு திருப்பூர் மாவட்டத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் அளிக்கப்பட உள்ளது.

÷ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யக் கூடியதாக அமைக்கப்படும் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைக்கு இம்மானியம் வழங்கப்படும். அதற்கான இடம் தகுதியானதாகவும், வெள்ள அபாயம் உள்ள பகுதிக்கு வெளியேயும் இருக்க வேண்டியது அவசியம். தவிர, தரமான நிலநீர் அல்லது ஆற்றுப் பாசனப் பகுதியில் மின்வசதி, சாலை வசதி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

÷மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்க 2 ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது 10 ஆண்டு குத்தகைக்குப் பெற்றிருக்க வேண்டும்.

தேவைக்கும் அதிக விவசாயிகள் விண்ணப்பித்தால் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

÷விருப்பமுள்ளவர்கள் மீன்வள உதவி இயக்குநர், உள்நாட்டு மீன்வளம், எண் 4, எஸ்வி காம்ப்ளக்ஸ், வீரப்பம்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, திண்டல் அஞ்சல், ஈரோடு -12 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**தேயிலை தொழிலை ஊக்குவிக்க "குவாலி டீ' விருது ": வரும் 28ல் குன்னூர் "உபாசி' அரங்கில் கோலாகலம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,01:01 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : நீலகிரி தேயிலை தொழிற்சார்ந்தோரை ஊக்குவிக்கும் வகையில் தேயிலை வாரியம் சார்பில் முதன் முறையாக நடத்தப்பட்ட "குவாலி டீ' போட்டியில் வெற்றி பெற்றோருக்கு 15 லட்சம் ரூபாய் அளவில் ரொக்கப் பரிசு, விருது வழங்கும் விழா நடக்கிறது.

இது குறித்து தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறியதாவது:

விவசாயிகள், விவசாய சங்கங்கள், தொழிற்சாலைகள், கொள்முதல் செய்பவர்களுக்கு தனித்தனியாக 80 கேள்விகள் அடங்கிய வினாத் தாள் வழங்கப்பட்டு, அவர்கள் அளித்த விளக்கங்கள் விஞ்ஞானிகளின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, நடுவர் குழுவால் மதிப்பெண் வழங்கப்பட்டு, வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நீலகிரி, வயநாடு, இடுக்கி என மாவட்ட வாரியாக பிரிக்கப்பட்டு 295 விவசாயிகள் வழங்கிய விண்ணப்பங்களில் இருந்து 50 சிறந்த விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு தலா 10,000 ரூபாய் ரொக்கம், நினைவுப் பரிசு வழங்கப்படவுள்ளன.

சிறு தேயிலை தொழிற்சாலைகளிடம் இருந்து பெறப்பட்ட 26 விண்ணப்பங்களில், முதல் மூன்று இடங்களை பிடித்த தொழிற்சாலைகளுக்கு முறையே தலா 1 லட்சம், 75 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுப் பரிசு மண்டல வாரியாக ஏழு சிறந்த தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது.

தரமான பசுந்தேயிலையை வழங்க முயற்சி செய்து வரும் விவசாய சங்கங்களில், பெறப்பட்ட 31

விண்ணப்பங்களில் 10 சிறந்த விவசாய சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு தலா 25 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவு கேடயம், சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.
தரமான தேயிலை கொள்முதல் செய்யும் 6 சிறந்த கொள்முதல் நிர்வாகிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.
வரும் 28ம் தேதி மதியம் 2.30 மணிக்கு குன்னூர் "உபாசி' அரங்கில் தேயிலை வாரிய தலைவர் பானு தலைமையில் நடக்கும் விருது வழங்கும் விழாவில், தேயிலை தொழில் சார்ந்தோர் பங்கேற்க வேண்டும்.
இவ்வாறு, அம்பலவாணன் கூறியுள்ளார்.

**காலிஃப்ளவர் விலை கடும் சரிவு : மார்க்கெட்டில் கூவிக்கூவி விற்பனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,01:55 IST

கருத்தை பதிவு செய்ய

சேலம்: சேலத்துக்கு காலிஃப்ளவர் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது. சேலம் நகரில், உச்சத்தில் இருந்த காய்கறிகளின் விலை ஒரு வாரமாக வீழ்ச்சியில் உள்ளது. அதேபோல், காலிஃப்ளவர் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சேலம் வ.உ.சி., மார்க்கெட், திருமணி முத்தாறு ஓடை அருகேயுள்ள மார்க்கெட், குகை பகுதி, கொண்டலாம்பட்டி, காரியாபட்டி உள்பட பல்வேறு மார்க்கெட்டுகளுக்கு காலிஃப்ளவர் வரத்து அதிகரித்துள்ளது. வரத்து அதிகரிப்பால், தள்ளுவண்டிகளிலும் காலிஃப்ளவர் விற்பØனை கூடியுள்ளது. ஒரு பெரிய காலிஃப்ளவர், 10 முதல், 25 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மூன்று சிறிய காலிஃப்ளவர், 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு வாரமாக வரத்து அதிகரித்துள்ளதால், கூவி கூவி விற்பனை செய்யப்படுகிறது.
காலிஃப்ளவர் விற்பனை குறித்து வியாபாரி முருகன் கூறியதாவது: கடந்த மாதம் காலிஃப்ளவர், 30 முதல், 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது சீஸனாக இருப்பதால், வரத்து அதிகரித்துள்ளது. ஒசூர், கோலாப்பூர், ஈரோடு மாவட்டம், தாளவாடி மலைப்பகுதி, நீலகிரி மாவட்டம், குன்னூர் மலைப்பகுதியில் இருந்து காலிஃப்ளவர் வரத்தாகிறது. தினமும், 20 டன் காலிஃப்ளவர் சேலத்துக்கு வரத்தாகிறது. இங்கிருந்து அருகில் உள்ள சிறிய நகரங்களுக்கு டெம்போ மூலம் அனுப்பப்படுகிறது. தள்ளு வண்டி வியாபாரிகள் அதிகளவு காலிஃப்ளவர் பூக்களை வாங்கி செல்கின்றனர். பெரிய ஹோட்டல்கள், தாபா கடைகளை நடத்துவோர் மார்க்கெட்டுக்கு வந்து மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது. சில பூக்கள் இரண்டு கிலோ எடை வரை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.
விவசாயிகள் கூறியதாவது: மலைப்பகுதிகளில் மட்டுமே விளைந்த காலிஃப்ளவர்

காலப்போக்கில், விவசாயத்தில் ஏற்பட்ட நவீன மயத்தால், சமவெளி பகுதிகளிலும் பயிரிடப்பட்டது. இதனால், உற்பத்தி அதிகரித்துள்ளது. கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம், நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஆகிய இடங்களில், அதிகளவு விவசாயிகள் காலிஃப்ளவர் பயிரிட்டுள்ளனர். தற்போது திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், ஈரோடு மாவட்டம், கோபி செட்டிபாளையம் ஆகிய சமவெளி பகுதிகளிலும் காலிஃப்ளவர் பயிரிடப்படுகிறது. குறைந்த மாத பயிராக இருப்பதாலும், சீஸன் நேரமாக இருப்பதாலும் விளைச்சல் அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கோலியஸ் சாகுபடி குறித்த விளக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,01:54 IST

கருத்தை பதிவு செய்ய

சேலம்: உலக உழவர் தினத்தை முன்னிட்டு, எம்.ஜி.பி. அன்னை பசுமை பூமி மூலிகை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர் அக்ரி பழனிவேல், ஒப்பந்த பண்ணையம் கோலியஸ் சாகுபடி பற்றி, விவசாயிகளுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கிறார். இந்த நிகழ்ச்சியானது, ஜெயா "டிவி'யில் இன்று காலை 11 மணி முதல் 12 மணி வரை ஒளிபரப்பாகிறது. விவசாயிகள், நிகழ்ச்சியை பார்வையிட்டு கோலியஸ் சாகுபடி முறைகள் குறித்து தெரிந்து கொள்ளலாம் என, அன்னை பசுமை பூமி மூலிகை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் அறங்காவலர்கள் குழு தெரிவித்துள்ளது.

**கன்று வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,01:31 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 27ம் தேதி, கன்றுகள் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 27ம் தேதி, கலப்பினக் கன்றுகள் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில், குடற்புழு நீக்கம், தடுப்பூசி முறை, தீவன முறை குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில், விவசாயிகள், இளைஞர், மகளிர் உட்பட அனைவரும்

பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்ற விருப்பமுள்ள நபர்கள், வரும் 26ம் தேதிக்குள், வேளாண் அறிவியல் நிலையத்தில், தஙகளது பெயரை நேரிலோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க 50 சதவீதம் மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,01:57 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மீன் வளத்துறையின் மூலம் தர்மபுரி மாவட்டத்தில், மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில், மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க, மீன் வளத்துறை மூலம், 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. 10 லட்ச ரூபாய் மதிப்பில் ஆண்டுக்கு, 100 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய கூடிய மீன் குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க உள்ள இடம், அதற்கு தகுதியானதாகவும், வெள்ள அபாயம் உள்ள பகுதிக்கு வெளியில் இருக்க வேண்டும். நல்ல தரமான நில நீர் அல்லது ஆற்றுப்பாசன பகுதியில் மின் வசதி, சாலை வசதி கொண்டதாக இருக்க வேண்டும். மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்க, 2 ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது பத்து ஆண்டு குத்தகை பெற்றிருக்க வேண்டும். தேவைக்கு அதிக விவசாயிகள் விண்ணபித்தால், இந்த நிதியாண்டில் ஒதுக்கப்படும் நிதி நிலைக்கு ஏற்றாற்போல் வரிசை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். விருப்பம் உள்ளவர்கள் மீன் வள இயக்குனர், உள் நாட்டு மீன் வளம், எண் 5/596, அவ்வையார் தெரு, கலெக்டர் அலுவலகம் எதிரில், தர்மபுரி' என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்ப படிவம் பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் அரசு அறிவிப்பு :அமராவதி சர்க்கரை ஆலை தனி அலுவலர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,00:50 IST

கருத்தை பதிவு செய்ய

உடுமலை : ""கரும்பு சாகுபடியை அதிகரிக்க நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தினை அரசு அறிவித்துள்ளது," என அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் ஆனந்தி கூறினார்.அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் (இப்கோ) சார்பில், கரும்பு சாகுபடியாளர்கள் கருத்தரங்கு நேற்று உடுமலை ஐ.எம்.ஏ., ஹாலில் நடந்தது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பெருக்கு அலுவலர் அருளானந்த சாமி வரவேற்றார்.அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் ஆனந்தி பேசியதாவது: நாட்டில், தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்தாலும், உணவு தயாரிப்பில் ஈடுபடும் விவசாயிகளே முதன்மையானவர்கள்; உலகத்தின் அச்சாணியாக திகழ்பவர்கள் விவசாயிகள் தான். சில ஆண்டுகளாக மற்ற தொழில்கள் வளர்ச்சியடைந்து, விவசாயம் தொய்வு ஏற்பட்டிருக்கலாம்; ஆனால், அழியாது. வேளாண்மைத்துறையினை வளர்ச்சி பெற வைக்கும் வகையில், அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில், கரும்பு சாகுபடியை அதிகரிக்க நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அரசு அறிவித்துள்ளது.தற்போது, தமிழ்நாட்டில், மூன்றரை லட்சம் ஹெக்டேரில், கரும்பு சாகுபடி செய்யப்பட்டு, 475 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 5 ஆயிரத்து 600 ஏக்கர் கரும்பு சாகுபடி அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 175 ஏக்கர் சாகுபடி அதிகரிக்க இலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான இடு பொருட்கள், செயல்பாடு விளக்கம் உள்ளிட்டவை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்படும்.சொட்டுநீர் பாசனத்தின் மூலம் கரும்பு சாகுபடியை மேற்கொள்ளலாம். கரும்பு வெட்ட ஆட்கள் பற்றாக்குறையினால் விவசாயிகள் பலர் கரும்பு பயிரிட தயக்கம் காட்டி வருகின்றனர். ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க இயந்திரங்களை பயன்படுத்தி கரும்பு வெட்டலாம். இதற்கு கரும்பு 5 அடிக்கு ஒரு பார் என்ற கணக்கில் சாகுபடி செய்ய வேண்டும். இந்த முறை 250 ஏக்கரில் மட்டுமே பின்பற்றப்பட்டு, கரும்பு பயிரிடப்படுகிறது.புதிய ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், விதை கரும்பும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கரும்பு

சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளுக்கு அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை முழு ஒத்துழைப்பு அளிக்கும்,' இவ்வாறு அவர் பேசினார்.சென்னை இப்கோ மாநில விற்பனை மேலாளர் கிருஷ்ணன், உழவியல் பேராசிரியர்கள் சுப்புலட்சுமி, பாண்டியன், அசோகராஜா, கல்யாண சுந்தரம், இப்கோ கோவை மண்டல மேலாளர் மதியழகன் ஆகியோர் பேசினர். கோவை இப்கோ கள அலுவலர் மணிகண்டன் நன்றி கூறினார். ஆலைப்பகுதி, கொமரலிங்கம், கணியூர், தாராபுரம், பல்லடம், நெய்க்காரப்பட்டி, பழநி கிழக்கு மற்றும் மேற்கு உள்ளிட்ட 8 கோட்டங்களில், கரும்பு சாகுபடியில், அதிக மகசூல் எடுத்த 16 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கரும்பு கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2011,00:50 IST

கருத்தை பதிவு செய்ய

உடுமலை : கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு 2,500 ரூபாயாக உயர்த்தி அரசு வழங்க வேண்டும் என கள் இயக்க ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.உடுமலையில், கள் இயக்க ஆலோசனை கூட்டம் தமிழக விவசாயிகள் சங்க தலைவர் துரை தலைமையில் நடந்தது. விவசாயிகள் சங்க கூட்டமைப்பு பொருளாளர் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க தலைவர் வேலாயுதம் வரவேற்றார். கூட்டத்தில், முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு கருதி மத்திய அரசு மத்திய பாதுகாப்பு படையை அணையில் நிறுத்த வேண்டும். பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் வரை நீர் மேலாண்மை மற்றும் நீர் நிர்வாகத்தை மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். கள்ளுக்கு அரசு விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டும். டாஸ்மாக் விற்பனை மதுக்கள் அனைத்தும், தென்னை மற்றும் பனை பொருட்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்க வேண்டும். அ.தி.மு.க., தேர்தல் வாக்குறுதியாக அளித்த டன்னுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் விலை இதுவரை விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. கரும்பு அறுவடை துவங்கியுள்ள நிலையில் உடனடியாக கொள்முதல் விலையை அதிகரிக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி, தென்னை சாகுபடியாளர் சங்க தலைவர் ராமசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

---

## டிசம்பர் 10–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 1.81 சதவீதமாக குறைந்தது



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*டிசம்பர் 10–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு1.81 சதவீதமாக குறைந்துள்ளது. உருளைக்கிழங்கு, வெங்காயம் விலை மிகவும் குறைந்துள்ளது இதற்கு ஒரு காரணம் என கூறப்படுகிறது. அதேசமயம், பருப்பு உள்ளிட்ட இதர உணவு தானியங்கள் விலை அதிகமாக உள்ளது.*

*மொத்த விலை*

*மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 4.35 சதவீதமாக இருந்தது. கடந்த 2008–ஆம் ஆண்டு பிப்ரவரி 9–ந் தேதியுடன் நிறைவடந்த வாரத்தில் இப்பணவீக்கம் 2.26 சதவீதமாக இருந்தது. அதன் பிறகு தற்போதுதான் இந்த அளவிற்கு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து, பாரத ரிசர்வ் வங்கி வரும் ஜனவரி 24–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை குறைக்க வாய்ப்புள்ளது என பொருளியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 49.38 சதவீதம் மற்றும் 34.39 சதவீதம் குறைந்துள்ளது. காய்கறி விலை 26.37 சதவீதமும், கோதுமை விலை 4.21 சதவீதமும் குறைந்துள்ளது.*

*கடந்த 2010–ஆம் ஆண்டின் இதே வாரத்தில் உணவு பணவீக்கம் 13.22 சதவீதமாக உயர்ந்து இருந்தது. அதாவது, மொத்த விலை குறியீட்டு எண் மிகவும் அதிகமாக*

இருந்தது. எனவே, இதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் 1.81 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளதாக தோன்றுகிறது. அதேசமயம், இதர உணவு தானியங்கள் விலை அதிகமாக உள்ளது. அதாவது, பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 14.22 சதவீதம் மற்றும் 11.19 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 9.25 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள், தானியங்கள் விலை முறையே 8.89 சதவீதம் மற்றும் 1.68 சதவீதம் அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள் பணவீக்கம் 2.12 சதவீதத்திலிருந்து 1.37 சதவீதமாக உள்ளது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் முந்தைய வாரத்தைப் போன்று 15.24 சதவீதமாக உள்ளது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள் பணவீக்கம் 5.48 சதவீதத்திலிருந்து 3.78 சதவீதமாக குறைந்துள்ளது.

தொழில்துறை உற்பத்தி

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி பல முறை முக்கிய கடன்களுக்கான வட்டியை உயர்த்தியதையடுத்து, அக்டோபர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தி 5.1 சதவீதம் சரிவடைந்தது. இந்நிலையில், உணவு பணவீக்கம் குறைந்து வருவது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் சற்று ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

## இருமாநில எல்லைகளில் நிலவும் பதற்றமான சூழலில் முல்லைப் பெரியாறு அணையில் தொழில்நுட்பக்குழு இன்று ஆய்வு

தேனி,டிச.23–

இரு மாநில எல்லைகளில் நிலவும் பதற்றமான சூழலில், முல்லைப் பெரியாறு அணையில் தொழில் நுட்பக்குழுவினர் இன்று (வெள்ளிக்கிழமை) ஆய்வு செய்கிறார்கள்.

பெரியாறு அணையில் இன்று ஆய்வு

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று சுப்ரீம் கோர்ட்டு கடந்த 2006–ம் ஆண்டு தீர்ப்பு கூறியது. இந்த தீர்ப்பை அடுத்து கேரள மாநில அரசு அணைகள் பாதுகாப்பு சட்டம் என்று ஒரு சட்டத்தை கேரள மாநில சட்டசபையில் நிறைவேற்றியது.

இதனை எதிர்த்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கு விசாரணையின் ஒரு பகுதியாக அணையின் பலத்தை கண்டறிய ஓய்வுபெற்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் தொழில்நுட்பக்குழுவை சுப்ரீம் கோர்ட்டு நியமித்தது.

இந்த குழுவினர் அணையின் பலத்தை ஏற்கனவே ஆய்வு செய்துள்ள நிலையில், அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவில் இடம் பெற்றுள்ள தொழில்நுட்ப குழு உறுப்பினர்களான சி.டி.தத்தா, டி.கே.மேத்தா ஆகியோர் முல்லைப்பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொள்ள இன்று (வெள்ளிக்கிழமை) மீண்டும் வருகிறார்கள். கேரள மாநிலம் கொச்சிக்கு விமானம் மூலம் வரும் இந்த குழு உறுப்பினர்கள் இருவரும், அங்கிருந்து கார் மூலம் முல்லைப் பெரியாறு அணைக்கு இன்று மாலை 3 மணியளவில் வருகிறார்கள். அங்கு இன்றும், நாளையும் ஆய்வுப்பணி மேற்கொள்கிறார்கள்.

வைகை அணை

பின்னர் அவர்கள் நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) முல்லைப் பெரியாறு அணையில் இருந்து புறப்பட்டு தேனி மாவட்டம், லோயர்கேம்ப்பில் உள்ள பெரியாறு நீர்மின்நிலையத்தை பார்வையிடுகிறார்கள். அதைத்தொடர்ந்து வைகை அணைக்கு சென்று தமிழ்நாட்டின் 5 மாவட்ட பாசனத்திற்கு போதிய நீராதாரமாக அணை இருப்பது பற்றி ஆய்வு மேற்கொள்கிறார்கள்.

அதன்பிறகு அங்கிருந்து புறப்படும் குழு உறுப்பினர்கள் இருவரும், திண்டுக்கல் மாவட்டம் பேரணை மற்றும் வாய்க்கால்களை பார்வையிடுகிறார்கள். அங்கு ஆய்வை முடித்துக்கொண்டு அந்த குழு உறுப்பினர்கள் இருவரும் கார் மூலம் மதுரை செல்கிறார்கள்.

இந்த குழுவினர் ஆய்வு அறிக்கையை அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்திடம் சமர்ப்பிக்க உள்ளார்கள். இந்த குழு அறிக்கை வருகிற பிப்ரவரி மாத இறுதிக்குள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட உள்ளது. குழு அறிக்கையின் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட்டு வருகிற மார்ச் மாதம் தீர்ப்பு அளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.